பட்டுக்கூடு விலை விவரம்

	சேலம்	ராசிபுரம்
வரத்து	100.350 கி.	284.250 கி.
அதிகபட்ச விலை	ரூ.836	ரூ.768
குறைந்தபட்ச விலை	ரூ.468	ரூ.290
சராசரி விலை	ரூ.771	ரூ.654

அணைகளின் நீர் மட்டம் நிலவரம்

குண்டேரிப்பள்ளம் : 18.52 அடி
பெரும்பள்ளம் : 22.00 அடி
வரட்டுப்பள்ளம் : 15.75 அடி

சேலம் மாநகர பேருந்து நிறுத்தங்களில் ரெடிமேட் நிழற்குடைகள்

நின்று செல்லும் பேருந்துகளின் விவரங்களை எழுத கோரிக்கை

■ சேலம்

சேலம் மாநகரில் உள்ள பேருந்து நிறுத்தங்களில், பயணிகள் நலனுக்காக ரெடிமேட் நிழற்குடையை சேலம் மாநகராட்சி, போக்குவரத்து போலீஸாருடன் இணைந்து அமைத்து வருவது, பயணிகளிடையே வரவேற்பைப் பெற்றுள்ளது. நிழற்குடைகளில், நின்று செல்லும் பேருந்துகளின் விவரங்களை குறிப்பிட வேண்டும் என்று மக்கள் வலியுறுத்தி உள்ளனர்.

சேலம் மாநகரில் உள்ள முக்கிய சாலைகளில், நகரப் பேருந்துகள் நின்று செல்லும் பேருந்து நிறுத்தங்கள் பலவும், நிழற்குடை இன்றி வானம் பார்த்த இடங்களாகவே உள்ளன. சில இடங்களில் மக்கள் திரளாக நிற்பதை வைத்து, அது பேருந்து நிறுத்தம் என்பதை அறிந்து கொள்ள முடியும்.

இதனால், வெயில், மழையின்போது மக்கள், திறந்த வெளியில் பேருந்துகளுக்காக காத்து நிற்க வேண்டிய நிலை இருந்தது.

சேலம் திருவாக்கவுண்டனூர் சாலை 3 ரோடு பேருந்து நிறுத்தத்தில் வைக்கப்பட்டுள்ள நிழற்குடை. படம்: எஸ்.குரு பிரசாத்

இந்நிலையில், சேலம் மாநகரில் உள்ள பேருந்து நிறுத்தங்களில், ரெடிமேட் நிழற்குடைகளை வைக்க சேலம் மாநகராட்சியும், போக்குவரத்து காவல்துறையும் இணைந்து நடவடிக்கை எடுத்துள்ளன. அதன்படி, மேற்கூரை, அமரும் இருக்கை ஆகியவற்றுடன் கூடிய இரும்பினால் ஆன ரெடிமேட் நிழற்குடை, ஆங்காங்கே நிறுவப்பட்டு வருகிறது. குறிப்பாக, டிவிஎஸ் பேருந்து நிறுத்தம், 5 ரோடு, 3 ரோடு உள்பட, நகரில் ஆங்காங்கே இரும்பினால் ஆன ரெடிமேட் நிழற்குடைகள் வைக்கப்பட்டு வருகின்றன. அவற்றில், வர்த்தக நிறுவனங்கள் விளம்பரங்கள் செய்ய, அதற்கான இடமும் உள்ளது. இந்த ரெடிமேட் நிழற்குடைகள், மக்களிடையே வரவேற்பைப் பெற்றுள்ளன.

பேருந்துகள் நிற்பதில்லை

சேலம் மெய்யனூர் 3 ரோட்டில், ரெடிமேட் நிழற்குடை வைக்கப்பட்டுள்ள நிலையில், அங்கு பேருந்துகள் நின்று செல்வதில்லை என அப்பகுதி மக்கள் கவலை தெரிவித்துள்ளனர். ரெடிமேட் நிழற்குடைகளில், பேருந்து நிறுத்தத்தின் பெயர், அவ்வழியாக செல்லும் பேருந்துகளின் விவரம் ஆகியவற்றுடன் சூரியசக்தி மின் விளக்குகள் பொருத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மக்கள் வலியுறுத்தி உள்ளனர்.

சேலம் அருகே அனுமதியின்றி ஜல்லிக்கட்டு போட்டி போலீஸாரை கண்டதும் தப்பி ஓடிய இளைஞர்கள்

10 வாகனங்களை பறிமுதல் செய்து விசாரணை

■ சேலம்

சேலம் அருகே அனுமதியின்றி ஜல்லிக்கட்டு போட்டி நடப்பது குறித்து விசாரணைக்கு போலீஸார் சென்ற நிலையில், அங்கிருந்து இளைஞர்கள் தப்பி ஓடினர்.

சேலம் மாவட்டம் கெங்கவல்லி அருகே ஓதியத்தூரில் அரசு அனுமதியின்றி ஜல்லிக்கட்டு போட்டி நடந்துள்ளது. வாடிவாசல் அமைத்து 20-க்கும் மேற்பட்ட காளைகள் அவிழ்த்து விடப்பட்டுள்ளன. இதில் மாடுபிடி வீரர்கள் பலர் கலந்து கொண்டு காளைகளை அடக்கியுள்ளனர்.

இதுகுறித்து கெங்கவல்லி போலீஸாருக்கு தகவல் கிடைத்தது. இதையடுத்து, போலீஸார் ஜல்லிக்கட்டு போட்டி நடந்த இடத்துக்கு சென்றனர். போலீஸாரைக் கண்டதும் அங்கிருந்த இளைஞர்கள் ஓட்டம் பிடித்தனர். மாடுபிடி வீரர்கள், மாட்டின் உரிமையாளர்களும் போலீஸார் பிடியில் சிக்காமல் தப்பினர்.

போட்டி நடந்த பகுதியில் இருந்த 10 இருசக்கர வாகனங்களை போலீஸார் பறிமுதல் செய்தனர். அனுமதியின்றி ஜல்லிக்கட்டு போட்டி நடத்தியது குறித்தும், இதில் சம்பந்தப்பட்டவர்கள் யார் என்பது குறித்தும் போலீஸார் வழக்குப் பதிவு செய்து விசாரிக்கின்றனர்

வியர்க்கதே

கொளத்தூர்

மேட்டூரை அடுத்த கொளத்தூர், சத்தியாநகர் ஆகிய துணை மின் நிலையங்களின் உயர் மின் பாதைகளில் மாதாந்திர பராமரிப்புப் பணிகள் இன்று (16-ம் தேதி) மேற்கொள்ளப்படுகிறது. எனவே, மின் நிலையங்களுக்கு உட்பட்ட கொளத்தூர், சின்னமேட்டூர், லக்கம்பட்டி, சின்னதண்டா, பெரியதண்டா, நிதிபுரம், கோவிந்தபாடி, காவேரிபுரம், கருங்கல்லூர், சத்தியாநகர், கத்திரிப்பட்டி, கோட்டையூர், காரைகாடு, ஏமனூர், கொங்கிரிப்பட்டி, கோரப்பள்ளம், புதுவேலமங்கலம், தானமூர்த்திகாடு உக்கம் பருத்திக்காடு, சுப்பிரமணியபுரம், பண்ணவாடி, சேத்துகுழி, வெள்ளகரட்டூர் மாமரத்தூர், ஒட்டங்காடு, குரும்பனூர், சவுரியார்பாளையம், ஆலமரத்துப்பட்டி, குள்ளம்பாளையம், பூமனூர், செட்டியூர், பாலமலை சுற்றியுள்ள பகுதிகளில் இன்று காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை மின் விநியோகம் இருக்காது என்று மேட்டூர் அணை கோட்ட மின் வாரிய செயற்பொறியாளர் வனிதா தெரிவித்துள்ளார்.

திருச்செங்கோடு

திருச்செங்கோடு துணை மின் நிலையத்தில் இன்று (16-ம் தேதி) மாதாந்திர பராமரிப்புப் பணி நடைபெற உள்ளது. எனவே இன்று காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை திருச்செங்கோடு நகராட்சி, கருவேப்பம்பட்டி, ஆத்தூராம்பாளையம், நாராயணம்பாளையம், அம்மாப்பாளையம், சீனிவாசம்பாளையம், தேவனாங்குறிச்சி, கீழேரிப்பட்டி, சிறுமொளசி, அணிமூர், ஆண்டிபாளையம், தோக்கவாடி, வரகூராம்பட்டி, செங்கோடம்பாளையம், சித்தம்பாளையம், கைலாசம்பாளையம், திருமங்கலம் ஆகிய பகுதிகளில் மின் நிறுத்தம் செய்யப்படும் என திருச்செங்கோடு மின்வாரிய செயற்பொறியாளர் எம்.கணேசன் தெரிவித்துள்ளார்.

செல்போனில் பழக்கமான பெண்ணிடம் தகராறு செய்ததால்

தாக்கப்பட்ட இளைஞர் உயிரிழப்பு கொலை வழக்கில் 5 பேர் கைது

■ சேலம்

சேலத்தில் செல்போனில் பேசி பழக்கமான பெண்ணிடம் தகராறு செய்ததால் தாக்கப்பட்ட இளைஞர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். இதில் ஏற்கெனவே 2 பேர் கைது செய்யப்பட்ட நிலையில் தற்போது கொலை வழக்காக மாற்றப்பட்டு மேலும் 3 பேரை போலீஸார் கைது செய்தனர்.

சேலம் தென் அழகாபுரத்தைச் சேர்ந்த தனியார் வங்கி கலெக்சன் ஏஜென்ட் விஜய் (30). இவர் கடந்த 4 ஆண்டுகளுக்கு முன்பு சோளம்பள்ளம் காந்தி நகரைச் சேர்ந்த சவுந்தரராஜன் மனைவி தனலட்சுமியுடன் பழக்கமாகி செல்போனில் பேசி வந்துள்ளார். கடந்த 6 மாதங்களாக தனலட்சுமி விஜயிடம் பேசுவதை நிறுத்திக் கொண்டார்.

இந்நிலையில், கடந்த 10-ம் தேதி விஜய் தனது நண்பர் கார்த்திக்குடன் இருசக்கர வாகனத்தில் சோளம்பள்ளத்திலுள்ள தனலட்சுமி வீட்டுக்கு சென்று, அவரிடம் தகராறில் ஈடுபட்டார். அப்போது, தனலட்சுமியின் கணவர் சவுந்திரராஜன் இருவரையும் கண்டித்துள்ளார். அப்போது சத்தம் கேட்டு சவுந்திரராஜனின் உறவினர்கள் கவுதம், விஜய், திவான்ராஜ், வினோத் ஆகியோர் அங்கு வந்து விஜய், கார்த்திக்கை தாக்கியுள்ளனர். இதில் இருவரும் பலத்த காயமடைந்து, சேலம் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டனர்.

இதுசம்பந்தமாக சூரமங்கலம் போலீஸார் கொலை முயற்சி வழக்குப் பதிவு செய்து, சவுந்திரராஜன், திவான்ராஜ் ஆகியோரை கைது செய்து சிறையில் அடைத்தனர். இதனிடையே, நேற்று முன்தினம் சிகிச்சை பலனின்றி விஜய் உயிரிழந்தார். இதையடுத்து, போலீஸார் கொலை வழக்காக பதிவு செய்து, விஜய் (29), வினோத் (34), கவுதம் (22) ஆகிய 3 பேரை நேற்று கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி சிறையில் அடைத்தனர்.

போக்சோ வழக்கில் தொழிலாளி கைது

■ ஈரோடு

ஈரோட்டில் 16 வயது மாணவிக்கு பாலியல் தொல்லை கொடுத்த வழக்கில் தொழிலாளி போக்சோவில் கைது செய்யப்பட்டார்.

விழுப்புரம் மாவட்டம் விக்கரவாண்டி சோழக்கனூர் பகுதியைச் சேர்ந்தவர் காத்தவராயன். இவரது மகன் ராம்குமார் (20), நாமக்கல் மாவட்டம் பாப்பம்பாளையத்தில் குடியிருந்து கூலித் தொழில் செய்து வருகிறார். இவர், ஈரோட்டில் உள்ள பாலிடெக்னிக் கல்லூரியில் படிக்கும்போது 16 வயது மாணவியுடன் பழகியுள்ளார். இந்நிலையில், மாணவியை காணவில்லை என ஈரோடு அனைத்து மகளிர் காவல் நிலையத்தில், பெற்றோர் புகார் அளித்தனர். போலீஸார் நடத்திய விசாரணையில் திருமண ஆசை காட்டி மாணவியை ராம்குமார் கடத்திச் சென்று பாலியல் தொல்லை அளித்தது தெரியவந்தது. ராம்குமார் மீது போக்சோ வழக்குப் பதிவு செய்து, அவரை போலீஸார் கைது செய்தனர்.

இந்து தமிழ் திசை

பொறுப்பல்ல: இந்தச் செய்தித்தாளில் பிரசுரம் ஆகியுள்ள விளம்பரங்களின் அடிப்படையில் செயல்படுமுன், அவற்றில் உள்ள தகவல்கள் சரியானவைதானா என்பதை போதுமான அளவு விசாரித்து சரிபார்த்துக்கொள்ளுமாறு வாசகர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். விளம்பரங்கள்/ விளம்பரதாரர் / அவர்களின் தயாரிப்புகள் / சேவைகள் போன்றவற்றின் நம்பகத்தன்மைக்கு இந்தச் செய்தித்தாளின் உரிமையாளரும் பதிப்பாளருமான கஸ்தூரி & சன்ஸ் லிமிடெட் / கே.எஸ்.எல். மீடியா லிமிடெட் உத்தரவாதம் அளிக்கவில்லை. இந்தச் செய்தித்தாளில் வெளியாகும் விளம்பரங்களால் ஏதேனும் சேதம் அல்லது இழப்பு ஏற்படும் பட்சத்தில், இந்தச் செய்தித்தாளின்/ மேற்சொன்ன நிறுவனங்களின் உரிமையாளர், பதிப்பாளர், அச்சிடுவோர், ஆசிரியர், இயக்குநர்கள், ஊழியர்கள் ஆகியோர் எந்தச் சூழலிலும் எந்த வகையிலும் அதற்குப் பொறுப்பாகமாட்டார்கள்.

படைப்புகளை அனுப்புவோர் பிரதி எடுத்துவைத்துக்கொண்டு அனுப்பவும். பிரசுரமாகாதவற்றைத் திரும்ப அனுப்ப இயலாது.

அரசியல் கட்சிகள், சங்கங்கள், சமூக அமைப்புகள், தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் மற்றும் இதர அமைப்புகள் தங்களது செய்தி அறிக்கைகள், நிகழ்ச்சிகள் குறித்த விவரங்களை எங்களது நாளிதழுக்கு மின்னஞ்சல் வழியாக அனுப்பலாம்.

மின்னஞ்சல் முகவரி:
repsalem@hindutamil.co.in

HDFC BANK
We understand your world

பதிவு அலுவலகம்: ஹெச்டிஎஃப்சி பேங்க் ஹவுஸ், சேனாபதி பபட் மார்க், லோயர் பேரல், மும்பை-400 013.

தங்க நகைகளுக்கான ஏல விற்பனை அறிவிப்பு

இதன் மூலம் குறிப்பாக கடன்தாரர்களுக்கும் பொதுவாக பொது மக்களுக்கும் அறிவிப்பது என்னவென்றால், பின்வரும் கணக்குகளில் கடனுக்கு ஈடாக அடமானம் வைக்கப்பட்ட / தங்க நகைகளை விற்பதற்கு பொது ஏலம் நடத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. நகைக் கடன் பாக்கிகளை செலுத்துமாறு HDFC பேங்க் லிமிடெட் (வங்கி) அறிவிப்புகளை அனுப்பிய போதும், நகைக் கடன் பெற்ற கடன்தாரர்கள் தாங்கள் முறையாக கையொப்பமிட்டு ஒப்புக்கொண்ட கடன் ஒப்பந்தத்தின் படி, கடனை முறையாக திருப்பிச் செலுத்தவில்லை.

அதனைத் தொடர்ந்து, சம்பந்தப்பட்ட கடன் கணக்குகளில் உள்ள முழு நிலுவைத் தொகையையும் ஏழு (7) நாட்களுக்குள் செலுத்துமாறு வங்கி முன்பே அறிவிப்புகள் வழங்கியிருந்தது. எனினும், கடனாளிகள் தங்களது கணக்குகளை சீர்படுத்தத் தவறியுள்ளதால், கடன் ஒப்பந்தத்தின்படியும் பொருந்தக்கூடிய சட்டங்களின் படியும் அடமானப் பெற்றவருக்கு கிடைக்கப்பெற்ற உரிமைகளை பயன்படுத்தி, அடமானமாக வைக்கப்பட்டுள்ள தங்க நகைகள் / ஆபரணங்களை பொதுக் ஏலத்தின் மூலம் விற்பனை செய்து, நிலுவைத் தொகைகளை வசூலிக்க வங்கி முடிவு செய்துள்ளது.

ஏலமானது கீழே குறிப்பிடப்பட்டுள்ள கிளை(களில்) பிற்பகல் 3.30 மணி முதல் நடத்தப்படும். ஏதேனும் காரணங்களால், அடமானப் பொருட்களின் ஏலம் நிர்ணயிக்கப்பட்ட தேதியில் நடத்தப்படவோ அல்லது நிறைவு செய்யப்படவோ முடியாவிட்டால், எந்தவொரு அறிவிப்பு இன்றி, ஏலத்தை பின்னர் ஏதேனும் தேதி மற்றும் நேரத்தில் தொடரவோ அல்லது மறுநிர்ணயம் செய்யவோ வங்கிக்கு முழு உரிமை உண்டு.

வ. எண்	நகை கடன் எண்	கடன்தாரர்கள் பெயர்	கடன் தொகை	ஏலம் நடைபெறும் இடம் (கிளையின் முகவரி)	ஏலம் நடைபெறும் தேதி
1	75995968	சரவணன் குமார்	₹ 59,100/-	HDFC பேங்க் லிமிடெட், ஸ்ரீ லட்சுமி கிருஷ்ணா காம்ப்ளக்ஸ், கதவு எண்.621/211A, 619/212, காமராஜனார் ரோடு, ஆத்தூர்-636102	16.07.2026
2	4001174089	சீனிவாசன் S/o.செல்வராஜ்	₹ 71,500/-		24.06.2026
3	4000073346	தமிழ்வேந்தன் சங்கர்	₹ 72,000/-	HDFC பேங்க் லிமிடெட், எண்.41 B சேலம் மெயின் ரோடு பாரதி புரம், தர்மபுரி-636705	24.06.2026
4	4000172077	அனுராக் குமார்	₹ 86,000/-	HDFC பேங்க் லிமிடெட், எண்.77, அண்ணாமலை நகர் மாருதி நகர், கிருஷ்ணகிரி, பைபாஸ் ரோடு, ஓசூர்-635109	16.07.2026

ஏலமானது "உள்ள இடத்தில் உள்ளவாறான", "உள்ளது உள்ளவாறான" மற்றும் "எந்த நிலையில் உள்ளதோ அந்த நிலையிலே" என்ற அடிப்படையில் நடைபெறும். அடமானமாக வைக்கப்பட்டுள்ள தங்க நகைகள் / ஆபரணங்களின் தரம், தூய்மை, காரட் அளவு, எடை அல்லது மதிப்பீடு தொடர்பாக HDFC பேங்க் லிமிடெட் ("வங்கி") எந்தவித வெளிப்படையான அல்லது மறைமுகமான உத்தரவாதமோ அல்லது பிரதிநிதித்துவமோ வழங்காது. ஏலத்தில் பங்கேற்க விரும்பும் ஏலதாரர்கள், தங்களது சொந்த செலவு மற்றும் விருப்பத்தின் பேரில், ஏலத்தில் பங்கேற்கும் முன், அடமான தங்க ஆபரணங்களின் நிலை, தூய்மை, காரட் அளவு, எடை மற்றும் மதிப்பீட்டை நேரில் ஆய்வு செய்து முழுமையாக திருப்தியடைய வேண்டும். ஆய்வு செய்வதற்கு ஏலம் ஆரம்பிக்கும் நேரத்திற்கு 45 நிமிடங்களுக்கு முன்பு அனுமதி வழங்கப்படும்.

ஏலத்தில் பங்கேற்பதன் மூலம், ஏலதாரர்கள் அடமானப் பொருட்களை தாங்களே தனித்தனியாக ஆய்வு செய்து, வங்கியின் எந்தவித பிரதிநிதித்துவத்தையும் சாராமல், அதனுடன் தொடர்புடைய அனைத்து ஆபத்துகளையும் ஏற்றுக்கொண்டவர்களாகக் கருதப்படுவார்கள். ஏலம் நிறைவடைந்த பின்னர், பொருட்களைத் திரும்பப் பெறுதல், மாற்றம், பணம் திருப்பிச் செலுத்துதல், இழப்பீடு அல்லது ஏலத்தை ரத்து செய்தல் போன்ற எந்தவித கோரிக்கைகளும் ஏற்கப்படமாட்டாது.

அனைத்து ஏலங்களும், பொருந்தக்கூடிய ஒழுங்குமுறை விதிகளின்படி வங்கியால் நிர்ணயிக்கப்படும் குறைந்தபட்ச கேட்பு விலைக்கு உட்பட்டதாக இருக்கும். ஏல மதிப்பு பின்வருவனவற்றில் குறைவானதின் அடிப்படையில் நிர்ணயிக்கப்படும்: (a) முந்தைய முப்பது (30) நாட்களுக்கான தங்கத்தின் சராசரி நிறைவு விலை, அல்லது (b) முந்தைய நாளில் India Bullion and Jewellers Association Ltd. (IBJA) வெளியிட்ட தங்கத்தின் நிறைவு விலை. குறைந்தபட்ச கேட்பு விலையை இறுதி செய்வதற்கும், தேவையான கூடுதல் நிபந்தனைகளை விதிப்பதற்கும் வங்கிக்கு முழு அதிகாரம் உண்டு.

ஏலம் தொடங்குவதற்கு முன், ஏதேனும் கடனாளர் கடன் ஒப்பந்த நிபந்தனைகளின்படி முழு நிலுவைத் தொகையையும் செலுத்தினால், அந்தக் கணக்கிற்கான அடமான தங்க நகைகள் / ஆபரணங்கள், எந்தவொரு முன் அறிவிப்பும் இன்றி, வங்கியின் விருப்பத்தின் பேரில் ஏலத்திலிருந்து திரும்பப் பெறப்படலாம்.

ஏலமும் அதன் விளைவாக ஏற்படும் விற்பனையும், வங்கியானது தனது முழுமையான மற்றும் தனிப்பட்ட விருப்புரிமையின்படி அவ்வப்போது விதிக்கக்கூடிய, திருத்தக்கூடிய அல்லது பரிந்துரைக்கக்கூடிய கூடுதல் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு உட்பட்டே இருக்கும்.

மேலும், வங்கியின் கீழ் கையொப்பமிட்ட அங்கீகரிக்கப்பட்ட அதிகாரிக்கு, எந்தவித முன்னறிவிப்பும் வழங்காமல் மற்றும் காரணம் குறிப்பிடாமல், ஏல நடவடிக்கைகளை ஒத்திவைக்க, நிறுத்தி வைக்க, மாற்றம் செய்ய, தற்காலிகமாக நிறுத்த அல்லது ரத்து செய்ய முழு அதிகாரம் உண்டு என்பதை கவனத்தில் கொள்ளவும். மேலும், எந்தவொரு ஏலப்புள்ளியையும் முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ ஏற்க அல்லது நிராகரிக்கவும் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரிக்கு முழு உரிமை உண்டு; அத்தகைய முடிவு அனைத்து பங்கேற்பாளர்களுக்கும் இறுதியானதும் கட்டாயமானதும் ஆகும்.

தேதி: 16.06.2026 Sd/- அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி, ஹெச்டிஎஃப்சி பேங்க் லிமிடெட்

UJJIVAN SMALL FINANCE BANK

பதிவு அலுவலகம்: கிரேப் கார்டன், எண்.27, 3வது A குறுக்கு, 18 மெயின், கொரமங்களா 6வது ப்ளாக், கொரமங்களா, பெங்களூரு-560095.

பொது அறிவிப்பு

தங்க நகை ஏலம் & விலைக்குறிப்பீடுகளை வரவேற்கும் அறிவிப்பு

கீழே குறிப்பிடப்பட்டுள்ள கடன்தாரர்கள் அவர்களுக்கு, பலமுறை நினைவூட்டப்பட்டபோதும், கடனை திருப்பிச் செலுத்தவும் அடமானமாக வைத்திருந்த தங்க நகைகளை குறிப்பிட்ட காலத்திற்குள் மீட்டெடுக்கவும் தவறியுள்ளனர்.

கீழே குறிப்பிடப்பட்டுள்ள கடன்தாரரால் அடமானமாக வைத்துள்ள தங்க நகைகள் பொது ஏலத்தில் விற்கப்பட உள்ளன. இந்த ஏலம் **உஜ்ஜிவன் ஸ்மால் ஃபைனான்ஸ் வங்கியின் கிளை அலுவலகம்** சொத்து எண்.19, நத்தம் SF எண்.418/1, வார்டு எண்.22, தரைத்தளம், வேணுகோபாலசாமி கோவில் தெரு, சத்தியமங்கலம் டவுன், ஈரோடு, தமிழ்நாடு-638 401 என்னும் முகவரியில் **23.07.2026 அன்று காலை 10:00 மணி முதல் மாலை 3:30 மணி வரை நடைபெறும்.** ஏலத்தில் தரப்படும் எந்தவொரு விலைக்குறிப்பீட்டினையும் ஏற்கவும் மறுக்கவும் வங்கிக்கு முழு உரிமை உண்டு. ஏலம் அந்த நாளில் முடிவடையாவிட்டால், அதே நிபந்தனைகளுடன் அடுத்தடுத்த நாட்களிலும் தொடரப்படும். கடன் வாங்கியவர் இறந்திருந்தால், ஏலத்துக்கு சம்பந்தப்பட்ட அனைத்து நிபந்தனைகளும் நியமனதாரர்/சட்ட வாரிசுகளுக்கு பொருந்தும். ஏலத்திற்கு முன், கடன் வாங்கியவர் நிலுவையில் உள்ள வட்டி மற்றும் பிற செலவுகளை செலுத்த வேண்டும். தவறினால், அடமானத் தங்க நகைகள் ஏலத்தில் விற்கப்படும் மேலும் மீதமுள்ள நிலுவைத் தொகை ஏதேனும் இருந்தால் அது வட்டி மற்றும் செலவுகளுடன் வசூலிக்கப்படும்.

கடன்தாரர் பெயர்	வங்கியின் கிளை பெயர்	அடமானம் வைக்கப்பட்ட நகையின் விவரம்	தோராயமான மொத்த எடை (கிராமில்)	தோராயமான மதிப்பு (INR)
ராஜாமணி பெருமாள்	1198-சத்தியமங்கலம்	செயின்	8.1	₹ 1,07,422/-
ராமலிங்கம் A		நெக்லஸ், செயின், காதணிகள்	54.4	₹ 7,21,453/-

ஆர்வமுள்ளவர்கள், கீழே குறிப்பிடப்பட்டுள்ள வங்கி கிளை முகவரிக்கு PAN கார்டு, சமீபத்திய பாஸ்போர்ட் சைஸ் புகைப்படம், சரியான அடையாளச் சான்று மற்றும் முகவரி சான்றுகளுடன், மேலே குறிப்பிடப்பட்ட ஏல நாள் மற்றும் நேரத்திலே வரலாம்.

மேலும் விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு, ஆர்வமுள்ள விலைக்குறிப்பீட்டாளர்கள் வங்கியின் இணையத்தளத்தினை பார்வையிடலாம் (https://www.ujjivansfb.in/e-auctions) அல்லது எங்களது கிளை முகவரியில் தொடர்பு கொள்ளலாம். **உஜ்ஜிவன் ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட்,** <UJJ20374 - சொத்து எண்.19, நத்தம் SF எண்.418/1, வார்டு எண்.22, தரைத்தளம், வேணுகோபாலசாமி கோவில் தெரு, சத்தியமங்கலம் டவுன், ஈரோடு, தமிழ்நாடு-638 401 **தொடர்பு கொள்ள வேண்டிய நபர்: பெரியசாமி D** - Mob-95001 20408.

ஏல விற்பனையின் விதிகள் மற்றும் நிபந்தனைகள்

1.ஏலத்தில் பங்கேற்க விரும்பும் ஏலதாரர்கள் தங்கள் விலைக்குறிப்பீடுகள்/விலைப்பட்டியலை உரிய படிவத்தில் மூடிய உறையில் தங்கள் அடையாளச் சான்று, முகவரிச் சான்றுடன் சமர்ப்பிக்க வேண்டும். 2.உரிய படிவத்தில் அல்லாத விலைக்குறிப்பீடுகள்/விலைப்பட்டியல்கள் ஏற்கப்படமாட்டாது. விலைக்குறிப்பீடுகள்/விலைப்பட்டியல்களை சரியான அடையாளச் சான்று மற்றும் முகவரி சான்றுகளுடன், **உஜ்ஜிவன் ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட் - உஜ்ஜிவன் ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க்,** சொத்து எண்.19, நத்தம் SF எண்.418/1, வார்டு எண்.22, தரைத்தளம், வேணுகோபாலசாமி கோவில் தெரு, சத்தியமங்கலம் டவுன், ஈரோடு, தமிழ்நாடு-638 401 **என்ற முகவரியில் 23.07.2026 காலை 10:00 மணி முதல் மாலை 3:30 மணி வரை சமர்ப்பிக்கப்பட வேண்டும்.** விண்ணப்பத்தை ஏற்க அல்லது நிராகரிக்க வங்கிக்கு முழு உரிமை உண்டு. 3.சீல் வைக்கப்பட்ட விலைக்குறிப்பீடுகள்/விலைப்பட்டியல் ஏல விற்பனை செயல்முறைக்கு தலைமை தாங்கும் அதிகாரியால், தகுதி பெற்ற பங்கேற்பாளர்கள் முன்னிலையில், **23.07.2026 அன்று காலை 10:00 மணி முதல் மாலை 3:30 மணி வரை திறக்கப்படும்.** 4.விண்ணப்பங்கள் திறக்கப்பட்ட பின், ஏல தலைமை அதிகாரியின் விருப்பப்படி, விலைக் குறிப்பீட்டினை உயர்த்தும் பொருட் விலைக் குறிப்பீட்டாளர் களுக்கு அவர்களுக்கிடையே பொது ஏல விற்பனை வாய்ப்பு வழங்கப்படலாம். ஏல விற்பனை செயல்முறைக்கு தலைமை தாங்கும் அதிகாரியால் அதிகரிக்கும் தொகை தீர்மானிக்கப்படும், மேலும் அவரது முடிவே இறுதியானது. 5.ஏல விற்பனை செயல்முறைக்கு தலைமை தாங்கும் அதிகாரி, அதிகபட்ச தொகையை முன்வைத்த பங்கேற்பாளர் வெற்றிகரமான ஏலதாரராக அறிவிக்கப்படுவார். 6.வெற்றி பெற்ற விலைக்குறிப்பீட்டாளர் தாம் ஏலத்தில் பெற்ற தங்க நகைகளுக்கான முழு விற்பனைத் தொகையை 3 வேலை நாட்களுக்குள் (அதிகபட்சம் அனுமதிக்கப்பட்ட வரம்பிற்குள் ரொக்கமாக அல்லது Demand Draft மூலம்) செலுத்த வேண்டும். காலக்கெடுவிற்குள் பணம் செலுத்தத் தவறினால், அவர் இதுவரை செலுத்திய தொகை அனைத்தும் அறிவிப்பின்றி பறிமுதல் செய்யப்படும். மேலும் தங்க நகைகள் மீண்டும் ஏலத்தில் விடப்படும். இந்நிலையிலும், அவர் தங்க நகைகளுக்கு எந்த உரிமையும் கொள்ள முடியாது. 7.முழுத் தொகையை செலுத்திய பின், வெற்றி பெற்ற விலைக்குறிப்பீட்டாளர் உடனே வங்கியிலிருந்து தங்க நகைகளைப் பெற்றுச் செல்ல வேண்டும். அதற்கு தேவையான சட்டப்பூர்வ கட்டணங்கள்/வரி/கட்டணங்களை அவர் தானே ஏற்க வேண்டும். மேலும், வங்கிக்காக தேவையான ஒப்புதல் கடிதத்தில் கையெழுத்திட வேண்டும். 8.ஏல நடைமுறையை நடத்தும் அதிகாரி, எந்தவொரு விலைக்குறிப்பீட்டையும் ஏற்க அல்லது நிராகரிக்கவும், ஏலத்தை ஒத்திவைக்க/நிறுத்த/ரத்து செய்யவும், விற்பனை விதிமுறைகளை முன் அறிவிப்பின்றி மாற்றவும் முழு உரிமை பெற்றுள்ளார். 9.விற்பனையானது வங்கியின் ஒப்புதலுக்கு உட்பட்டது. 10.விற்பனையானது "உள்ளது உள்ளவாறு" மற்றும் "உள்ளது இடத்தில் உள்ளவாறு" என்ற அடிப்படையில் விற்கப்படும்.

தேதி: 16.06.2026 அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி, உஜ்ஜிவன் ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட்

ப்ருடென்ட் ARC லிமிடெட்

பதிவு & கார்ப்பரேட் அலுவலகம்: 611, D மால், மனை எண். A-1, நேதாஜி சுபாஷ் பிளேஸ், பிதாம்புரா, புது டெல்லி-110 034.
Tel: +91-11-45320000 | Email Id: info@prudentarc.com | CIN: U74900DL2011PLC225445

இணைப்பு IV [விதி 8(1) பார்க்கவும்] சுவாதீனம் அறிவிப்பு

பாதுகாப்பு மற்றும் நிதிச் சொத்துக்களின் மறுசீரமைப்பு மற்றும் பிணைய நலன்களை அமலாக்குதல் சட்டம், 2002-ன் (இனி "சட்டம்" என குறிப்பிடப்படும்) விதிகளின்படியும், அச்சட்டத்தின் பிரிவு 13(12)-ன் கீழ் வழங்கப்பட்ட அதிகாரங்களை பிணைய நலன்களை அமலாக்குதல் விதிகள் 2002-ன் விதி 3 உடன் இணைத்துச் செயல்படுத்தும் வகையிலும் **Prudent Trust - 123/25-ன் அறங்காவலராகச் செயல்படும் ப்ருடென்ட் ARC லிமிடெட்** அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியாகிய கீழே கையொப்பமிட்டவர், அச்சட்டத்தின் பிரிவு 13(2)-ன் கீழ் ஒரு கோரிக்கை அறிவிப்பை வெளியிட்டிருந்தார், அவ்வறிக்கையின் மூலம், கடன்தாரர்கள்/இணை-கடன்தாரர்கள்/ஜாமீன்தாரர்(கள்) ஆகியோர் நிலுவையில் உள்ள தொகையை குறிப்பிட்ட காலத்திற்குள் திருப்பிச் செலுத்துமாறு கோரப்பட்டிருந்தார்.

மேலும், இச்சட்டத்தின் பிரிவு 5-ன் விதிகளின் கீழ் ஒப்படைப்பவரால் **Prudent Trust 123/25-ன் அறங்காவலராகச் செயல்படும் ப்ருடென்ட் ARC லிமிடெட்-ன்** பெயருக்கு நிதிச் சொத்துகளும் அதனோடு தொடர்புடைய பிணைய உரிமைகளும் ஒப்படைக்கப்பட்டுள்ளன இவ்வொப்படைப்பின் விளைவாக ப்ருடென்ட் ARC லிமிடெட் ஆனது பிணையம் பெற்ற கடனாளியின் இடத்தைப் பெற்றுள்ளதுடன் நிலுவையில் உள்ள தொகையை வசூலிக்கவும் பிணைய உரிமையைச் செயல்படுத்தவும் தகுதி பெற்றுள்ளது.

கடன்தாரர்(கள்)/ஜாமீன்தாரர்(கள்) ஆகியோர் நிர்ணயிக்கப்பட்ட காலத்திற்குள் செலுத்த வேண்டிய நிலுவைத் தொகையை திருப்பிச் செலுத்தத் தவறியுள்ள நிலையில் **Prudent Trust 123/25-ன் அறங்காவலராகச் செயல்படும் ப்ருடென்ட் ARC லிமிடெட்-ன்** அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியாகிய கீழ